www.padippakam.com



# அகதியான போது .................

--------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

**------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)**

**பாகம் 6**

1994 தேர்தல் காலம் அது.யாழ்ப்பாண முஸ்லீம்கள் உட்பட வடக்கு முஸ்லீம்கள் தெற்கில் இருந்து கொண்டே வாக்களிக்கலாம் என்று அரசாங்கம் அறிவித்த காலம் அது.யுத்தகளம் வடக்கிலும் ,கிழக்கிலும் தீவிரம் கண்டிருந்த நேரம் அது.வரலாற்றில் வடக்கு முஸ்லீகளுக்கு விசேடமாக யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கு கிடைத்த வரப்பிரசாத அறிவிப்பு அது. வழமையில் சந்தர்ப்பத்தை பயன்படுத்தத்தெரியாத யாழ்ப்பாண முஸ்லீம்கள் இதிலும் விதிவிலக்காக இருக்கவில்லை.வழமையில் எந்த விடயத்திலும் இரண்டாக பிளவுபடும் அவர்கள் இந்த விடயத்திலும் பிரிவதற்கு தவறவில்லை.

புத்தளத்தை சேர்ந்த டாக்டர்.இல்யாஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் நல்ல பெயரை எடுத்துக்கொண்டிருந்த காலம் அது.வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் கஷ்டத்தில் இருந்த அந்த மக்கள் அவரின் பின் நோக்கல் எதவும் தெரியாமல் அவரை தலைக்கு மேல் வைத்து கொண்டாடியபோதுதான் அந்த பாராளு மன்றத்தேர்தலும் வந்தது

அந்த இல்யாஸ் யாழ்ப்பாணம் சார்பாக பாராளுமன்றத்தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியில் இருந்து போட்டியிட்டபோது தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறி முன்னாள் ஜமாஅத் ஒன்றின் தலைவரும் இன்னாள் கவுன்சிலருமான அந்த 'மௌலவி'யின் தலைமையிலான குழுக்களும் முன்னின்று கடுமையாக உழைத்ததை வரலாற்றால் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது. தூர நோக்கு கொண்டு சிந்திக்கதெரியாத தலைவர்கள் இல்லாததும்,தூய நோக்கம் கொண்டு சிந்திக்கதேரியாததும் நம் சமூகம் எதிர்நோக்கும் சமகாலசவால்கள்.

தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறி முகாம் முகாமாக நகர் நகராக ஏறி இறங்கிய அந்த மௌலவியினதும் அவருக்கு பின்னல் நின்ற செம்மறி கூட்டத்தின் செயல்களுக்கு அவர்கள் காட்டிய காரணம்....

புலிகளையும் தமிழர்களையும் பகைத்து விடக்கூடாது என்பதுதான்.காட்டிய காரணம் நமது உம்மாவின் கோழைத்தனத்தையும்,பலவீனத்தையும் காட்டின.

இரண்டு மணிநேரத்தில் துப்பாக்கி முனையில் மானத்தை தவிர அனைத்தையும் பறிகொடுத்த பின்னர் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் பயந்து தாமும் தேர்தலில்

படிப்பகம்

www.padippakam.com

நிற்காதுமற்றவர்களையும் நிற்க விடாத அவர்களின் 'புத்திசாதுர்ய'மடத்தனம் என்றும் மன்னிக்கமுடியாத நடவடிக்கை.வரலாற்றில் கிடைத்த மிக அறிய சந்தர்ப்பத்தைதொலைத்துவிட்ட கவன ஈனமான செய்கை.
தேர்தலை பகிஷ்கரித்த இதே நபர்கள் பின்னர் தேர்தலில்நின்றமை, வென்றமை,அனைத்தையும் எந்த காரணத்தோடு எப்படி சொல்லுவது ?

சரி புத்தளத்தை சேர்ந்த டாக்டர்.இல்யாஸ் எதிர் நோக்கிய

எதிர்ப்புக்களையும்,சவால்களையும் 'வீரமாக' எதிர்கொண்டு தேர்தலில்

நின்றார்.யாழ்ப்பாண முஸ்லீம்கள், மரணமடைந்த பலரின் வாக்கு அட்டைகளை

பயன்படுத்தி வாக்குப்போட்டு இல்யாசுக்கும்,முஸ்லீம் காங்கிரசுக்கும் இருந்த

விசுவாசத்தை காட்டினர்.வாக்குப்போட வயதுக்கு வராத பல சிறுவர்கள் பிறரின்

வாக்கு அட்டைகளை பயன்படுத்தினர்.எந்த அளவுக்கு என்றால் 13 வயதான ஒரு

சிறுவன் கள்ள வோட்டு போட்ட பின்னர் இன்னொரு முறை வோட்டு போட சென்ற போது அங்கிருந்த அதிகாரி

'டேய் தம்பி நீ ஏற்கனவே வோட்டு போட்டிக்கிறாய்.உன்ற கைல மை இருக்கு ' என்று கூற ..

அந்த சிறுவன் அளித்த பதில் ' இது எடது கைலதானே இருக்கு வலது கைல போடுங்க' என்று..

சிறுவர் முதல்,வயதானவர்கள் வரை இவ்வாறாக வாக்கு போட்டு தேர்தலிலும் வென்றார் அந்த இல்யாஸ்.

யாழ்ப்பாண முஸ்லீம்களும் தமக்கொரு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளார் என்று

பெருமிதப்பட்டு தமது பிரச்சினைகள் தீர்வு காணப்படப்போகிறது என்ற எதிர்பார்ப்பில்

இருந்தனர்.அனால் நடந்ததோ வேறு.பெரிதாகவோ சிறிதாகவோ அவர் எதையும்

கிழிக்கவில்லை.

பாராளுமன்றத்துக்கு தெரிவானது தொடக்கம் முடிவு வரை ஒரு சில தடவைகள் மாத்திரமே வாயை திறந்து பேசியதுடன்,அகதிகளுக்காக எதையும் பேசவும் இல்லை.பேசியதெல்லாம் மக்கூனாவில் கருவாட்டு வாசம் வருவது மட்டும்தான். தவித்தமுயல் அடிக்க தான் வரவில்லை என்று பத்திரிகையில் பேட்டி போட்டு பப்ளிசிட்டிஎடுத்தார். அவரது பாராளுமன்ற காலத்தில் அடித்தது முழுக்க தவித்த முயலைத்தான்.கூட்டிப்பார்த்தால் யாழ்பாணத்தை சேர்ந்த ஒருசிலருக்கு வேலைவாய்ப்புபெற்றுக்கொடுத்ததுதான் அவரும் முஸ்லீம் காங்கிரசும் யாழ்ப்பாண முஸ்லீம்களுக்காகசெய்த மாபெரும் பணி.தம்மால் தெரிவு செய்யப்பட்ட எம்பீயை தம்மாலேயே சந்திக்கசெல்ல முடியாமல் இருந்த தூரதிருஷ்ட நிலைக்கு யாழ்ப்பாண முஸ்லீம்கள்தள்ளப்படிருந்தனர்.
வரலாற்றில் கிடைத்த சந்தர்ப்பத்தை இல்யாஸ் என்ற பயனற்ற மரத்துக்கு நீராய இறைத்த யாழ்ப்பாண முஸ்லீம்கள் ஏன் இவருக்கு வோட்டு போட்டோம் என்று

உணர ஒரு சில மாதங்களே எடுத்தன. ....

இல்யாஸ் அப்படி இருக்க முஸ்லீம் காங்கிரஸ் யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கு

என்ன செய்தது என்று கேட்டால் பெரிதாகவோ சிறிதாகவோ எதுவும்

செய்யவில்லை என்றுதான் கூற வேண்டும். 'தலைவர்' கிழக்கு

மாகாணத்தைஅதிகமாக கவனித்ததாலும்,பௌத்த பிக்குகளுடன் விவாதம்

படிப்பகம்

www.padippakam.com

நடத்துவதில் அதிக அக்கறை எடுத்ததாலும்,அவரது பொறுப்புகளை அவரது பாரியார் பொறுப்பு எடுத்த காலம் அது.தலைவருக்கு இருந்த பெயர் பாரியாரால் பறிபோய்க்கொண்டு இருந்தது தலைவருக்கே அப்போது தெரிந்திருக்கவில்லை.இடம் பெயர்ந்த வடக்கு அகதிகள் விடயத்தில் முஸ்லீம் காங்கிரஸ் நினைத்து இருந்தால் ,மனம் வைத்திருந்தால் ஐ.நா முதல் அரபு நாடுகள் வரை அவர்களின் பிரச்சினை எடுத்துச்செல்லப்பட்டிருக்கலாம்.இப்போது உள்ள தமிழர்கள் இடம்பெயர்வு பிரச்சினை சர்வதேசப்படுத்தப்பட்டுள்ளது போல சர்வதேசமயப்படுத்தப்பட்டிருக்கலாம்.ஆனால் பொறுப்பில் இருந்த முஸ்லீம் காங்கிரஸ்,இலங்கை முஸ்லீம்களை பிரதி நிதித்துவப்படுத்வதாக கூறிக்கொண்டு கிழக்கு மாகாணமுஸ்லீம்களை மாத்திரம் பிரதிநிதிதுவப்படுத்தியதே தவிர வேறு எதையும் செய்யவில்லை.அடுத்த அமைச்சு என்ன என்பதையும்,அந்த அமைச்சில் என்ன உள்ளது என்பதையும் பற்றியும் தீவிரமாக ஆராயந்துகொண்டிருந்ததே தவிர வடக்கு முஸ்லீம்கள் பற்றி சிரத்தை காட்டவில்லை.வெறும் பேச்சோடு மாத்திரம் வடக்கு முஸ்லீம்களின் சமாச்சாரம் முடிக்கப்பட்டிருந்தது.வடக்கு முஸ்லீம்களின் விடயத்தில் குறிப்பாக யாழ்ப்பாண முஸ்லீம்களின் விடயத்தில் முஸ்லீம் காங்கிரஸ் செய்தது எதுவுமே இல்லை. தமது சொந்த அரசியல் இலாபத்துக்காகவும்,அடுத்த தேர்தல் ஆசனத்துக்காகவும் யாழ்ப்பாண முஸ்லீம்கள் முஸ்லீம் காங்கிரசால் பயன்படுத்தப்பட்டார்கள் அந்த வேளையில் நானும் வேலை தேடிக்கொண்டிருந்தேன்

(தொடரும் )

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com
படிப்பகம்